# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை
## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 06 - நேரம்:30 நிமிடம்
## விடைப்பத்திரம்: கொம்பில் வைத்த கவளம் போல

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

<u>வினாத்தொகுதி:01</u>

**(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.**

- **திணை** : பாடாண்திணை:பாடாண்திணை என்பது புகழ்ந்து பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு. ஒருவனுடைய வீரம்,கொடை, தண்ணளி முதலானவை புகழ்ந்து பாடப்படுதல்.
- **துறை** : பரிசில் கடாநிலை:பரிசில் கடாநிலை என்பது யாவரும் பரிசில் பெற்றார். யான் பெற்றிலன் எனத் தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினரது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை, பரிசில் தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்றுஉரைத்து அதனைத் தருமாறு குறிப்பால் வேண்டுதல் முதலானவை ஆகும்.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- நீட்டினும் - காலத்தை நீட்டினும்
- தலைநாள் - முதலிற் சென்ற நாள்
- ஏமாந்த - ஆசைப்பட்ட
- பயின்று - பழகி

**(04 புள்ளிகள்)**

**(iii) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் திறனும் புகழும் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.**

- விருந்தினர் எத்தனை முறை செல்லினும் இனிது வந்து வரவேற்பவன் என அவனது **வரவேற்பு சிறப்பை எடுத்துக் காட்டி**
- அரசனை நாடி வருவோர்க்கு கொடை நிச்சயமானது என்பதை எடுத்துரைத்தது.

- அதியமான் நெடுமான் அஞ்சியும் கொடையையும் புகழையும் **நெஞ்சத்தை விழித்து கூறுவனூடாக**
- பாடத்தக்க ஆண் மகனின் ஒழுகலாறு அவனுடைய வீரம் கொடை தன்னழி முதலான பாடாண் திணைகளின் ஊடாக
- ''வருந்தவேண்டா வாழ்கவென்றாளே'' என **வாழ்த்துப் பொருளை கையாண்டு**
- ''யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல'' எனும் **உவமையணியினை கையாள்வதாகும்.**

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:02</u>

**(i) இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக்குறிப்பிடுக.**

- ஔவையார் அதியமானிடம் பரிசில் வேண்டிப் பாடிச்சென்ற சமயம் அரசன் அதனை உடன்வழங்கவில்லை. அதியமான் ஔவையாரிடம் பெரும் மதிப்பும் விருப்பும் உடையவன். பரிசில்வழங்கத் தாமதித்த போதும் ஔவையார் அதியமானின் உண்மை உள்ளத்தைக் கருத்திற் கொண்டு, கொடையின் நிச்சயத்தன்மையை தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் அமைந்த சந்தர்ப்பதில் பாடப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

**(ii)** இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- கவளம் - உணவுத்திரள்
- பூண் - அணிகலன்
- பெறூஉங் காலம்-பெறுகின்ற வேளை
- பொய்யாகாது -தப்பாது

**(04 புள்ளிகள்)**

**(iii) அதியமான் நெடுமான் அஞ்சி சிறப்புக்களாக இப்பாடலில் குறிப்பிடப்படுவன யாவை?**

- *கடையேழு வள்ளல்களின் ஒருவரான அதியமான் நெடுமான் அஞ்சி மறவர்களுக்கு தலைவனாக விளங்கியவன்.*
- *உண்டோரை நெடுங்காலம் வாழ்ந்திருக்கச் செய்யும் நெல்லிப் பழத்தையும் பெற்று அதனை ஔவைக்கு கொடுத்தவன்*
- *காஞ்சி நகர் அரசன் தொண்டைமானிடத்து ஔவையை தூது விட்டவன்.*
- *பனை மாலையும் வெட்சி, வேங்கைப்பூவையும் அணியும் அதியமான் சேரமானுடைய உறவினன் ஆவான்.*
- *இவன் கோவலூரை வெற்றி கொண்டமையை பரணர் பாடியுள்ளார்.*
- *இவனுடைய ஊர் தகடூர் ஆகும். இவன் மகன் பொருட்டெழினி ஆவான்.*
- *இவனை ஔவையார், பரணர், பெரும் சித்திரனார், பொன் முடியார், முதலியோர் பாடியுள்ளனர்.*
- நாம் ஒருநாள் அல்ல இரண்டு நாள் அல்ல பல நாளும் மீள மீள பலரோடு கூடச் சென்றாலும் முதல் நாளினைப் போல விருப்பமுடன் உதவும் பண்புடையவன்.
- அவன் பரிசில் தர காலம் சிறிது தாழ்ப்பினும் தாழ்த்தா விடினும் யானையினது கோட்டிடை வைத்த (கொம்பின் இடையே) வைக்கப்பட்ட கவளம் எப்படியும் அதன் வாயகத்தை சேர்வது போல காலம் தாழ்ந்தாலும் தாழ்த்தாவிட்டாலும் எப்படியும் நிச்சயமாக கைவந்து சேரும் என புலவர்கள் உறுதியாக நம்பும் கொடை வள்ளல்

- அணிகலன்கள் அணிந்த யானையும் தேரையும் உடையவன்.
- ‘‘வாழ்க அவன்தாளே’’ என புலவர்களால் பாடிப் புகழ்த்தப்படும் / வாழ்த்தப்படும் சிறப்புடையவன்.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i) இப்பாடலில புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயங்கள் எவை?விளக்குக.**

- அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்திறனும்புகழும்

**(04 புள்ளிகள்)**

**(ii) ஔவையாரின் மனம் வாட்டமடைந்த பின்னணியைக்குறிப்பிடுக.**

- ஔவையார் அதியமானிடம் பரிசில் வேண்டி பாடிச் சென்ற அரசன் அதனை உடன் வழங்கவில்லை. அதனால் பரிசில் வழங்க தாமதம் ஏற்பட்டது. அதியமான் அஞ்சி ஔவையாரிடம் பெரும் மதிப்பும் விருப்பும் உடையவன். எனினும் ஔவையார் அதியமானின் உண்மை உள்ளத்தை கருத்திற்கொண்டு கொடையின் நிச்சய தன்மையை தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் இப்பாடல் பாடப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

**(iii) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடை மாண்பினை எடுத்துக்காட்டுக.**

- ஒரு நாள், இரு நாள் பல நாள் ஒருவரோடு சென்றாலும் பலரோடு சென்றாலும் முதலில் சென்ற நாள் போன்ற விருப்பினன் என்பதால் அதியமானின் சலியாத கொடைத்திறன் புலப்படுத்தப்பட்டது.
- கோட்டிடை வைத்த கவளம் போல எனும் உவமைத்தொடர் மூலம் யானையினது தந்தத்தில் வைத்த கவளம் எப்படியும் அதன் வாயகத்தை போய் சேர்வது போல காலம் தாழ்ந்தாலும் தாழாவிட்டாலும் எப்படியும் தமது கைவந்து சேரும் என அவனது கொடையின் உறுதியும் நிச்சயத் தன்மையும். புலப்படுத்தப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:04</u>

**(i) “யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது” எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் அணியை எடுத்துக்காட்டுக.**

- **உவமை அணி:**
  **உவமானம்**:யானையினது கோட்டிடை வைத்த (கொம்பின் இடையே) வைக்கப்பட்ட கவளம் எப்படியும் அதன் வாயகத்தை சேர்வது
  **உவமேயம்**:காலம் தாழ்ந்தாலும் தாழ்த்தாவிட்டாலும் எப்படியும் நிச்சயமாக கைவந்து சேரும் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்தன்மை.
  **பொதுத்**தன்மை: நிச்சயமான கொடைத்தன்மை.

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடலில் புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்திறனை வெளிப்படுத்த கையாண்ட உத்திகளை எடுத்து விளக்குக.**

- **ஒருவரோ பலரோ கொடைபெறச் செல்லும் தடவையையும் முறையையும் சுட்டிக்காட்டி**:ஒரு நாள், இரு நாள் பல நாள் ஒருவரோடு சென்றாலும் பலரோடு சென்றாலும் முதலில் சென்ற நாள் போன்ற விருப்பினன் என்பதால் அதியமானின் சலியாத கொடைத்திறன் புலப்படுத்தப்பட்டது.

- விருந்தினர் எத்தனை முறை செல்லினும் இனிது வந்து வரவேற்பவன் என அவனது **வரவேற்பு சிறப்பை எடுத்துக் காட்டி** வெளிப்படுத்தியுள்ளார்.
- **கோட்டிடை வைத்த கவளம் போல எனும் உவமைத்தொடர் மூலம்**: யானையினது தந்தத்தில் வைத்த கவளம் எப்படியும் அதன் வாயகத்தை போய் சேர்வது போல காலம் தாழ்ந்தாலும் தாழாவிட்டாலும் எப்படியும் தமது கைவந்து சேரும் என அவனது கொடையின் உறுதியையும் நிச்சயத் தன்மையும் புலப்படுத்தியுள்ளார்.
- அதியமான் நெடுமான் அஞ்சியும் கொடையையும் புகழையும் **நெஞ்சத்தை விழித்தும்** ''வருந்தவேண்டா வாழ்கவென்றாளே'' என **வாழ்த்துப் பொருளை கையாண்டும்** பாடத்தக்க ஆண் மகனின் ஒழுகலாறு,வீரம்,கொடை,தன்னழி முதலான பாடாண் திணைகளின் ஊடாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடல் வெளிப்படுத்தும் சங்ககால புறப்பாட்டு மரபுகளை எடுத்துக்காட்டுக.**

* பாடாண் திணையில் புலவர் (ஔவையார்) கூற்றில் அமைந்துள்ளது.
* பரிசில் கடாநிலை எனும் துறையையுடையது எல்லோரும் பரிசில் பெற தான் பெறவில்லை என தனது பரிசில் கொடுப்போர் இடத்தே புலப்படுத்தி கூறுவதாகும்.
* அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னனின் பெயர் சுட்டி பாடப்பட்டிருத்தல்
* அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் திறனும் புகழும் வெளிப்படுமாறு பாடப்பட்டிருத்தல்.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**